கொண்டு உடல் நலத்தைக் காக்கும் சக்தி பெறுவதில்லை. ஆனாலும், இந்த அளவுக்கு காமாலை நோயைக் கட்டுப்படுத்தியிருப்பதற்கு நாம் இந்தத் துறையில் பணியாற்றியவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த மஞ்சள் காமாலை வியாதியை ஸ்வஸ்தப்படுத்த அலோபதி முறையில் நல்ல மருந்துகள் இல்லை என்றும், ஆயுர்வேத முறையில் தழைகளைக் கொண்டு அதன்மூலம் சிகிச்சை செய்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்களே. ஆகவே, ஆயுர்வேத முறையில் ஸ்வஸ்தமாக்க ஊக்கம் அளிக்கப்படுமா, அந்த யோசனையை அமைச்சர் செயல்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி ஆயுர்வேதம், சித்த முறைகளில் உபயோகிப்பதில், கரிசலாங்கண்ணி என்கிற மூலிகை மூலம் மருத்துவம் செய்யப்படுகிறது. அலபதி முறையிலும், இந்தக் கரிசலாங்கண்ணி மூலிகையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகளையோ, சாரையோ மருந்துக்காக வழங்கப்படுகிறது என்பது கடந்த 5, 6 ஆண்டுக்காலமாகச் செல்வாக்கு பெற்றிருக்கிறது. ஆனாலும், குறிப்பிட்ட கட்டங்களில் வேறு சில மருந்துகளும் தேவைப்படுகின்றன. அந்த மருந்துகளைக் கொடுத்து, தாங்கும் சக்தியை உண்டாக்கி, அதன்மூலம் சிகிச்சை செய்யப்படுகிறது.

பழைய ஜெயங்கொண்டானுக்கு மருந்தகம்

* 504 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், பழைய ஜெயங்கொண்டத்தில் ஒன்றியத்தின் மூலம் மருந்தகம் துவக்க எப்போது தீர்மானிக்கப்பட்டது?

(இ) இதுவரை மருந்தகம் துவக்கப்படாததற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் உத்திரவிடப்பட்டது.

(இ) ஒன்றியத்தின் நிதி நிலைப் பற்றாக்குறையின் காரணமாக மருந்தகம் துவக்கப்படவில்லை.

Poultry Development

* 505 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any new scheme for Poultry Development has been introduced in Chingleput District; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள படப்பை, சித்தலப்பாக்கம், பஞ்சாயத்து ஒன்றிப்புகளில், கோழி வளர்ப்போர் சங்கம் அமைத்து வர்த்தக வங்கிகள்மூலம் அவர்களுக்கு உதவியளிக்கும் திட்டம் ஒன்றினை அரசு இவ்வருடம் செயல்படுத்த ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. படப்பையில் கிராம வளர்ச்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டு, அங்கு கோழி வளர்ப்போருக்கு மானிய உதவியோடு கோழிகள் விற்கப்பட்டுள்ளது.